**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,பேரையூர்.**
**முன்னிலை: திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**2020ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7ம் நாள் திங்கட்கிழமை**
**சி.ஆர்.எம்.பி.எண்.2681/ 2020**

-------

ஜெயமுருகன் (53/2020)
த/பெ. சுப்பையா தேவர்,
கிழக்குத் தெரு,
பாப்பையாபுரம்,
பேரையூர் தாலுகா. ... மனுதாரர்/எதிரி

- எதிர்-

அரசுக்காக - சார்பு ஆய்வாளர்,
பேரையூர் காவல் நிலையம்,
குற்ற எண். 2681/2020 ... குற்ற முறையீட்டாளர்
U/s. 379 IPC

எதிரி காவல் அடைப்பு செய்த நாள் : 29.08.2020

எதிரி கு.வி.மு.ச பிரிவு 437-ன் கீழ் பிணைமனு தாக்கல் செய்து இன்று என் முன்பாக விசாரணைக்காக வந்தபோது, எதிரிக்காக வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.கே.அய்யப்பன், எம்.பழனிக்குமார் ஆகியோர்கள் முன்னிலையாகியும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை ஒன்று அவர்களும் முன்னிலையாகியும் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்.

**உத்தரவு**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி தரப்பில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லையென்றும் எதிரி கடந்த 29.08.2020 முதல் உசிலம்பட்டி கிளைச் சிறையில் இருந்து வருகிறார் என்றும், எனவே, எதிரியை பிணையில் விடவேண்டும் என்றும் இவ்வழக்கில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இறுதியாக இம்மனு விசாரணைக்கு வந்தபோது எதிரி தரப்பில் எதிரியை பிணையில் விடவேண்டும் என்றும் இவ்வழக்கில் வாதிடப்பட்டது.

அரசு தரப்பில் எதிரியை பிணையில் விட்டால் ஓடிச்சென்று தலைமறைவு ஆகிவிடுவார் என்பதாலும், இன்னும் இவ்வழக்கு புலன் விசாரணையில் இருப்பதாலும், இவ்வழக்கின் சாட்சிகளை மிரட்டி கலைக்கவோ, மிரட்டவோ கூடும் என்பதாலும், மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட தலைமறைவு எதிரிகளை கைது செய்ய வேண்டியிருப்பதாலும், மீண்டும் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், மேலும் இதனால் நீதிமன்ற விசாரணை பாதிக்கப்படும் என்பதாலும், மேற்படி எதிரியை பிணையில் விட கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

எதிரி கடந்த 10 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். எதிரியை வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கைது செய்து,வழக்குச் சொத்து கைப்பற்றப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எதிரியை நிபந்தனையுடன் கூடிய ஜாமீனில் விடுவதுதான் நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரி ரூ.10,000/-க்கு சொந்த பிணைமுறியை சிறை கண்காணிப்பாளர்,உசிலம்பட்டிக்கு அளிக்கும் பட்சத்தில் பிணையில் விடுவித்த பின்பு ஒரு மாத காலத்திற்குள் ரூ.10,000/-க்கு இரு நபர் பிணைமுறி அளிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

என்னால் 2020ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**(ஒ.ம்.)ஈ.முத்துசாமி,பி.ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றம் நீதித்துறை நடுவர்,**
**பேரையூர்.**

**<u>நகல்</u>**
சிறை கண்காணிப்பாளர்,
உசிலம்பட்டி.